LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 61-70 Doi.: 10.21839/lsdjmr.2024.v3.161

Research Article

# சங்க கால இனக்குழு சமூகம்

பேரா.இரா.கிரிஜா,

இம்மாகுலேட் மகளிர் கல்லூரி,

கடலூர்.

E-mail: drgirija24@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஆதி மனிதன் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ளக் குழுவாகக் கூடி வாழத் தலைப்பட்டான்.அவ்வகையில்தென்னிந்தியர்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். அவ்வாறு இடம் பெயர்ந்து செல்லும் சாலையில் வெவ்வேறு பண்பாடுகளை வளர்த்துக் கொண்டனர்.இப்பண்பாடு, உணவு சேகரிப்பு நிலைச் சமூகமும் வேட்டைச் சமூகமும், ஆநிரை மேய்ப்போர் சமூகம் என்ற இனக்குழு வாழ்க்கை முறையிலிருந்தன.

**திறவுச் சொற்கள்:** இனக்குழு,திணைக்கண்ணோட்டம், கூட்டமைப்பு வாழ்க்கை, பழைய கற்காலம்,சீறூர் மன்னன்,சிறுகுடிக் கிழான், சீறூர் வண்மையோன்,முதுக்குடி மன்னன், குறுநில மன்னன்.

## முன்னுரை

ஆதி மனிதன் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ளக் குழுவாகக் கூடி வாழத் தலைப்பட்டான். இக்கூட்டமைப்பு வாழ்க்கை முறையையே மானிடவியலாளர் இனக்குழு சமூக அமைப்பு என்கின்றனர். இத்தகைய இனக்குழு, தமிழக ஐந்திணை இனக் குழுக்கள், இனக்குழுவும் தலைமையும், இனக்குழுத் தலைவர், தொன்மைக்குடி, இனக்குடி, இருப்பிட இயல்பு, இனக்குடி விளைப்பொருள்கள், இனக்குழு சமுதாய உணவு, இனக்குழு, கூட்டுழைப்பும் பகிர்ந்து உண்ணலும் என்னும் பகுப்பிலவ் இக்கட்டுரை அமைகின்றது.

## இனக்குழு - தமிழக ஐந்திணை இனக்குழுக்கள்

“தென்னிந்தியர்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். அவ்வாற இடம் பெயர்ந்து செல்லும் சாலையில் வெவ்வேறு பண்பாடுகளை வளர்த்துக் கொண்டனர். அப்பண்பாடுகளின் தன்மையானது அவ்விடங்களின் உற்பத்தி அளவைப் பொறுத்திருந்தது. அவருடைய கருத்துப்படி திணைக் கண்ணோட்டமானது குன்றுகளிலிருந்தும் மலைகளிலிருந்தும் கீழேயுள்ள சமவெளிப் பகுதிக்குத் தமிழர்கள் பரவியதை வெளிப்படுத்துகிறது. தென்னிந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய கருத்துக் குறிப்பாக உள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தென்னிந்தியா ஏராளமான இனக்குழு மக்களைக் கொண்டிருந்தது. அவர்களுள் ஐந்து குழுவினரை மட்டும் இப்பகுதியின் புவிவியல் பிரிவுகளுக்கு ஏற்பச் சிறப்பாக வேறுபடுத்திக் காட்டப்பெற்றுள்ளனர். தமிழரது சமுதாய அமைப்பு தனிப்பட்ட இயல்புகளை உடையதாகி இருந்தது. இதனை மானிடவியல் விளக்குகிறது. இத்தனிப்பட்ட இயல்பினால்தான் வரலாற்று முற்காலத்தில் வேறுபட்ட ஐந்து வளர்ச்சி நிலைகளாக

ஒரு காலத்தில் அவை வெளிப்பட்டன” (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம், ப. 42)

என்று பி.டி.சீனிவாச அய்யங்கார், வி.ஆர்.இராசேந்திர தீட்சிதர் ஆகியோரின் கருத்துகளை எடுத்துக்காட்டி இனக்குழு வாழ்க்கையைச் சங்க இலக்கியங்களில் காணும் வழிவகை காட்டுகிறார் கார்த்திகேசு சிவத்தம்பி.

சமூக, மானிடவியல் ஆய்வுகள் வழி உணவு சேகரிப்பு நிலைச் சமூகமும் வேட்டைச் சமூகமும், ஆநிரை மேய்ப்போர் சமூகமும் இனக்குழு வாழ்க்கை முறையிலிருந்தன. அக்குழுக்களுக்குள் தலைவர் இருந்தனர். ஆநிரை உடைமைச் சமூகத்திற்கு அடுத்து மருதநில வேளாண்மைச் சமூகத்தில் வள்ளல்கள், குறுநில மன்னர், பெருநில வேந்தர் என படிப்படியே பேரரசு உருவாக்கம் அமைந்தது.

“பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் மாந்தர் உணவு சேகரிக்க அலைந்து திரிந்து வாழ்ந்தனர். கருவி செய்யும் விலங்கான மனிதன் கைக்குக் கிடைத்த கற்களை அப்படியே பயன்படுத்திய காலம் பழைய கற்காலம். உணவு சேகரித்தல், வேட்டையாடுதல் தொழில்கள் ஆயின. கொடிய விலங்குகளைத் தாக்க, பெரிய கூட்டமாகச் சென்றனர். வேட்டை உணவைப் பாதுகாத்து வைக்க முடியாததால் உபரியைப் பகிர்ந்து கொண்டனர். புராதன இனக்குழு இரத்த உறவுமுறை கொண்டதாகும். ஒவ்வொருவரும் யாவருக்குமாகவும் யாவரும் ஒவ்வொருவருக்குமாகவும் என்பது அக்கால வழக்கமாகும்” (கா. சுப்பிரமணியம், சங்க காலச் சமுதாயம், ப. 3)

எனும் கருத்திற்கேற்பச் சங்கச் சமுதாயத்தில் ஒரு சூழல் விளங்கியது என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறியவியலுகிறது.

**இனக்குழுவும் தலைமையும்**

“பெரும்பாலும் இச்சமூகங்கள் வேட்டையாடுதல் மற்றும் உணவு சேரித்தல் ஆகிய அடிப்படை நிலைகளைக் கொண்டவையாகவே இருக்கும். இச்சமூகங்கள் பெருமளவு உணவு சேகரிப்பு தருகின்ற குறிப்பிடத்தக்க அறுவடைக் காலங்கள் அற்றவையாகும். சமத்துவத் தன்மையுள்ள சமூகங்கள் ஒன்றுக்கொன்று உதவும் பொருளாதார அமைப்புகளாகவே செயல்பட்டன. சமவுரிமை கொண்டிருந்த இச்சமூகங்களில் வளங்கள் ஒரு குறிப்பிட்ட அளவேனும் மீள்வழங்குகனை செய்யப்பட்டிருக்கும். அதன் எளிமை நிலையில் அம்மீள்வழங்குகை குடும்ப மட்டத்தினுள் நடந்திருத்தல் வேண்டும். விரிந்த நிலையில் விஸ்தரிக்கப்பட்ட குடும்பம் முழுமைக்கும் அம்மிள்வழங்குகை செய்யப்பட்டிருக்கலாம். அத்தகைய கரு விதை நிலையில் நடைபெறும் மீள்வழங்குகையில் அக்குடும்பத்திலுள்ள வயதால் மூத்த பெண்மணியே ஜீவாதாரமான பாகத்தை வகிப்பாள்” (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம், பக். 43)

“அத்தகைய வகை மாதிரியான வரிசைசார் சமூகத்தில் சுரண்டலதிகாரம் உள்ள பொருளியல் அதிகாரமும் இருக்காது. அது மாத்திரமல்லாது உண்மையான அரசியல் அதிகாரமும் இருக்காது. இத்தகைய அமைப்பில் நடவண் நிலை பெறுபவர் முன்னர்க் குறிப்பிட்ட கரு விதை நிலையில் மீள்வழங்குகைக்குப் பொறுப்பாக உள்ளவரை ஒத்தவராகவே இருப்பர். இது ஆச்சரியப் படத்தக்க ஒன்றன்று. ஏனெனில், வகை மாதிரியான வரிசை நிலைச் சமூகத்தில் உறவுக் குழுமத்தின் விஸ்தரிப்பு என்பது அந்த உறவுக் குழுமத்தின் ஒரு இயல்பான விரிவேயாகும். முன்னேறிய வேடுவச் சமூகத்திலோ உணவைச் சேகரிக்கும் சமூகத்திலோ அன்றேல் எளிமை நிலைப்பட்ட விவசாயச் சமூகத்திலோ மீள்வழங்குகை முறையின் உயர் அச்சாணியாக இருப்பவர் எந்த அளவுக்கு அதனைக் கொண்டு நடத்துபவராக இருப்பாரோ அந்த அளவுக்கே அதனால் பாதிக்கப்படுபவராகவும் இருப்பர். அவருடைய பிரதான செயற்பாடு சேகரிப்பதே அல்லாமல் அடித்துப் பறிப்பது அன்று. அவன் பணி கிடைத்ததை மற்றையோருக்கு வழங்குவதே. தானே நுகர்வதற்கு அன்று. அதன் பொருளாதார அரசியல் துறைகளில் சம உரிமை அம்சங்கள் வலுவுள்ளதாகக் காணப்படுவதுண்டு. மீள்வழங்குககை கடமையைச்

செய்யும் நடுவண் பதவியினர் அப்பதவிக்கான சில அலங்காரச் சின்னங்களை உடையவர்களாகவே இருப்பர். இவர்கள் இருக்கைகளில் அமர்வர். பெரிய வீடுகளில் வசிப்பர். அயலவர்களால் கலந்தாலோசிக்கப்படுவர். அவர்களுடைய மீள்வழங்குகைப் பங்கேற்பு. தன்னிச்சையாகவே சமூகத்தின் சமய வாழ்விலும் அவர்களை முன்னிலைக்குக் கொண்டுவந்து விட்டுவிடுகிறது. மரபுவழிக் குலத்தலைவர் அல்லது இரத்த இனவுறவுத் தலைவர் என்ற காரணத்தாலும் அத்தலைமையிடம் கிட்டிவிடுகிறது" (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம், பக். 44-45)

என்ற கா. சிவத்தம்பியின் கருத்து இனக்குழு உருவாக்க முறையில் தலைமைப் பொறுப்பு அமையும் இடத்தையும் சூழலையும் தெளிவுபடுத்தக் காணலாம்.

இனக்குழுத் தலைவன் – இயற்பெயர் சுட்டாமை

"இனக்குழுத் தலைவன் அக்குழு மக்களைப் போலச் சாதாரண நிலையிலேயே வாழ்ந்தான். அவனுக்கெனத் தனிச் சலுகைகள் கிடையா. மக்களோடு சேர்ந்து உழைப்பில் பங்கு கொண்டு உணவு தேடியும் உணவைப் பங்குவைத்து உண்டும் வந்தான்" (கா.சுப்பிரமணியம், சங்க காலச் சமுதாயம், ப. 33)

"இனக்குழுத் தலைவன் சீறூர் மன்னன், சிறுகுடிக் கிழான், சீறூர் வண்மையோன் (புறம். 197, 299, 208, 330, 388) எனப் பாராட்டப் பெற்றான். இவன் கூட்டுழைப்பிலிருந்து விலகிப் பிறர் உழைப்பில் வாழ்ந்தவன் அல்லன். இம்மன்னன் அரசன் அல்லன். இனக்குழுத் தலைவன் ஆவான். போர்க்காலத் தலைவன் ஆவான்" (கா.சுப்பிரமணியம், சங்க காலச் சமுதாயம், ப. 34)

"இனக்குழுத் தலைவன் அவசியம் நேரும் பொழுதுதான் தலைமைப் பொறுப்பில் செயல்பட்டான். பிற சந்தர்ப்பங்களில் அவனும் பிறரைப் போல அக்குழுவின் ஒரு சாதாரண உறுப்பினரைப் போலவே நடந்து கொண்டான்" (கா.சுப்பிரமணியம், சங்க காலச் சமுதாயம், ப. 35)

என்பன அவர்கள் இயற்பெயர்கள் சுட்டப்பெறாமல் அழைக்கப் பெறாமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்தியுள்ளன.

இனக்குழுத் தலைவர் – தொன்மைக் குடி

வரலாற்றுக்கு முற்பட்ட இனக்குழுவின் தலைவராக விளங்கியவர்கள் இவர்கள். முதுகுடி மன்னர், குறுநில மன்னர், வேந்தர்கள் ஆகியோர்க்கு முற்பட்டவர்கள். சங்க இலக்கியப் பாடல்களில் காணப்பெறும் குறிப்புகள் இவர்கள் சமுதாய எச்சங்களாகவே உள்ளன. மீட்டுருவாக்க நிலையில் இப்பாடல்களை ஆராயின் இவர்களின் தொன்மைக்குடியின் சிறப்பறியவியலும்.

"வேந்துடைத் தானை முனைகெட நெரிதர

ஏந்துவாள் வலத்தன் ஒருவன் ஆகி

.......................................

புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்

தொன்மை சுட்டிய வண்மை யோனே" (புறம். 330)

என்ற பாடலில் சீறூர்த் தொன்மை சுட்டிய என வரும் தொடர் அதைத் தெளிவுபடுத்தக் காணலாம்.

இனக்குழு – இருப்பிட அமைப்பு

எளிய வாழ்க்கை முறையினர் ஆகிய இவர்களின் இருப்பிடமும் எளிமையாக வஅமைந்திருந்தன.

"கைவார் நரம்பின் பாணர்க்கு ஓக்கிய

நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர்" (புறம். 302)

எனும் பாடல் தொடர் எளிமையான வாழ்க்கை வாழ்வதற்கே போதுமான பொருளாதார வளமற்ற நிலப்பகுதி அவர்களின் வாழ்விடம் என்பதைக் காட்டுகிறது.

“பருத்தி வேலிச் சீறூர்” (புறம். 299)

என்ற தொடர் நீர்வளம் இல்லாத அவர்களின் கரிசல் மண் நிலப்பகுதியைச் சுட்டுகிறது.

“களிறுபொரக் கலங்கு கழல்முள் வேலி

அரிதுண் கூவல் அங்குடிச் சீறூர்” (புறம். 306)

என்பது முள்வேலியைப் பாதுகாப்பாகக் கொண்டதும் உண்ணும் நீரளவு போதுமானதாக இல்லாததுமாகிய நிலப்பகுதியைச் சுட்டுகிறது.

“நடுகல் பிறங்கிய உவலிடு பறந்தலை

புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்” (புறம். 314)

என்ற பாடலடிகள் நடுகற்கள் நிறைந்த நிலப்பகுதியைக் காட்டுகிறது. அந்நிலப் பகுதியில் நெல்லி மரங்கள் நிறைந்து காணப்பெறுகின்றன.

“படலை முன்றில் சிறுதினை உணங்கல்

புறவும் இதலும் அறவும் உண்கென” (புறம். 319)

என்பது தழையால் வேயப்பட்ட குடில்களையும் முற்றத்தில் சிறுதினை உலர்த்தப் பெற்றிருந்ததையும் புறாக்கள் முதலான பறவைகள் உண்ணலையும் காட்டுகிறது.

“இருமருப்பு உறழும் நெடுமாண் நெற்றின்

பைம்பயறு உதிர்த்த கோதின் கோல்அணை

கன்றுடை மரையா துஞ்சு சீறூர்” (புறம். 297)

இப்பாடல் எருமைகளின் கரிய கொம்புகளைப் போன்று நீண்ட முற்றிய பயற்றின் நெற்றுகள் நீக்கப்பெற்ற கொடிகளைப் படுக்கும் இடமாகக் கொண்ட காட்டுப் பசுக்களை காட்டுகிறது. மேலும்,

“காட்டோடு மிடைந்த சீயாமுன்றில்” (புறம். 316)

என்ற பாடல் தொடர், செத்தைகள் மிகுந்து காணப்பெறும் தூய்மை செய்யப்பெறாத வீட்டின் முன்றிலைக் காட்டக் காணலாம்.

“முன்றில் முஞ்சையொடு முசுண்டை பம்பி

பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழல்

........................................

மான்அதள் பெய்த உணங்குதினை வல்சி

கானக் கோழியோடு இதல்கவர்ந் துண்டென” (புறம். 320)

என்ற பாடல் வீட்டின் முற்றத்தில் முஞ்சைக் கொடியோடு முசுண்டைக் கொடியும் தழைத்து வளர்ந்துள்ளன என்பதையும் அவை வீட்டிற்கு முன் பகுதியில் இயற்கையாகவே பந்தர் போலக் காட்சி தருகின்றன என்பதையும் அந்நிழலில் பலரும் உறங்குவர் என்பதையும் உலர்த்துவதற்காக மான்தோலில் பரப்பப்பெற்ற தினையாகிய உணவினைக் காட்டுக்கோழியோடு இதல் என்ற பறவையும் கவர்ந்துண்டன என்பதையும் காட்சிப்படுத்தியுள்ளது.

“தாளிமுதல் நீடிய சிறுநறு மஞ்ஞை

முயல்வந்து கறிக்கும் முன்றில் சீறூர்” (புறம். 328)

என்ற பாடற் பகுதியிம் முஞ்ஞைக்கொடி சுட்டப்பெற்றுள்ளது. அதோடு தாளிக்கொடி கூறப்பெற்றுள்ளது. மேலும் அம்முன்றிலில் வளர்ந்துள்ள முஞ்ஞைக் கொடியின் தளிர்களை முயல்கள் வந்து கறித்துத் தின்கின்ற காட்சியும் ஆங்குக் காட்டப்பெற்றுள்ளன.

"பொறிப்புறப் பூழின் போல்வல் சேவல்

மேந்தோல் களைந்த தீம்கொள் வெள்எள்

சுளகிடை உணங்கல் செவ்வி கொண்டுடன்

.................. கோட்டெலி ஆட்ட

கலிஆர் வரகின் பறங்குபீள் ஒளிக்கும்

வன்புல வைப்பி னதுவே" (புறம். 321)

என்பது அவ்விருப்பிடம் சுட்டும் பகுதியதே.

இப்பாடல், குறும்பூழ்ப் பறவை முற்றத்தில் முறத்தில் வைத்து உலர்த்தப் பெறுகின்ற எள்ளை உட்கொண்டது. மேலும் அது எலிகளை அலைத்துப் பிடிக்க வரகுக் கதிர்கள் குவித்து வைக்கப்பெற்றுள்ள போரில் பதுங்கிக் கொண்டிருக்கிறது என்ற சூழலைப் புனைந்துள்ளது.

"புதுவரகு அரிகால் கருப்பைப் பார்க்கும்

புன்தலைச் சிறாஅர் வில்எடுத்து" (புறம். 322)

ஆர்க்கும் காட்சியும் அத்தகையதே. இப்பாடல் தொடர்கள் எலியைப் பிடிக்கும் வேட்டைச் சிறுவர்களைக் காட்டுகிறது.

"பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்

புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்" (புறம். 324)

என்பதும் அஃதே.

மேற்காட்டிய சான்றுகள் யாவும் எளிய வாழ்க்கை முறையினராகிய இனக்குழு மக்களின் சீறூர் பகுதியை விளக்கமாகக் காட்டுகின்றன.

இனக்குழு விளைபொருள்கள்

கரம்பை, பருத்தி வேலி, கழல் முள்வேலி, வன்புலம், புன்புலம் என்ற புனைவுகள் வேளாண்மைக்கு ஏற்ற நிலமாக இல்லை என்பதையும் மேட்டுப்பகுதியினை உடையதாகவும் வரகு, தினை போன்ற உணவுப் பயிர்களும் முசுண்டை, அவரை, முஞ்ஞை போன்ற கொடிகளும் விளையக்கூடியதாக அந்நிலம் விளங்குகிறது.

"............. முதல் புறவு சேர்ந்திருந்த

புன்புலச் சீறூர் நெல்விளை யாதே

வரகும் தினையும் உள்ளவை எல்லாம்

இரவல் மாக்களுக்கு ஈயத் தொலைந்தன" (புறம். 328)

இப்பாடலில் முல்லை நிலத்தைச் சார்ந்திருக்கும் புன்செய் நிலங்களில் நெற்பயிர்கள் விளைவதில்லை என்பது தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. அந்நிலம் நீர்வளமில்லாத புன்செய் நிலம். ஆகையால் வரகும் தினையும் ஆகிய உணவுப் பொருள்களே விளைகின்றன என்பதும் தெளிவாகக் காட்டப்பெற்றுள்ளது.

"கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே

சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையோடு

இந்நான் கல்லது உணவும் இல்லை" (புறம். 335)

என்ற பாடற்பகுதியும் வரகு, தினை, கொள், அவரை ஆகிய நான்கு உணவுப்பொருள்கள் விளைவதாகக் காட்டுகின்றன.

இவையும் புன்புல வேளாண்மையைக் குறிப்பிடுகின்றன. மேலும் இந்நிலத்தில் நெல், வாழை முதலியன பயிரிட முடியாத, நீர்வளமற்ற பகுதி என்பதும் அறியமுடிகிறது.

இனக்குழுச் சமுதாய உணவு

சீறூராகிய புன்புலத்தில் வரகு, தினை, அவரை, கொள்ளு, பயறு வகைகள் விளைவதால் அங்கு வாழ்பவர்களுக்கு அவையே உணவுப் பொருள்களாயின.

மிகுதியான குறிப்புகளாக வரகும் தினையுமே காணப்பெறுகின்றன. இயற்கையாக விளைந்த பொருள்களோடு வேட்டையாடிப் பெற்ற இறைச்சியும் அவர்களுக்கு உணவாயிற்று.

“தடிவு ஆர்ந்திட்ட முழு வள்இரம்” (புறம். 320)

“முளவுமா தொலைச்சிய முழுச்சொல் ஆடவர்

உடும்பு இழுது அறுத்த...

கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்

மறுகுடன் கமழும்” (புறம். 325)

என்ற பாடற்பகுதி வேட்டையாடப் பெற்ற முள்ளம் பன்றியின் இறைச்சி, உடும்பினது நிணம் ஆகியன இவர்களின் உணவாக அமைந்தமையைக் காட்டுகிறது.

“வேட்டச் சிறாஅர் சேண்புலம் படராது

படப்பைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்

விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் மிதவை” (புறம். 326)

எனும் பாடற்பகுதி உடம்பின் நிணம் பெய்யப் பெற்ற தயிருடன் சேர்த்த கூழ் உணவாக விளங்கினமையைச் சுட்டுகிறது.

“புறவும் இதலும் புறவும் உண்கெனப்

பெய்தற்கு எல்லின்று பொழுதே அதனான்

முயல்கட்டு ஆயினும் தருகுவேம்” (புறம். 319)

என்ற பாடலடிகளின் வழி புறவு, இதல் முதலான பறவைகளின் இறைச்சியும் முயல் இறைச்சியும் ◌அவர்களின் உணவாயினமையை அறியமுடிகின்றது.

“கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை

தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு

காந்தளஞ் சிறுகுடிப் பகுக்கும்” (நற். 85)

என்னும் இப்பாடல் வழி குறிஞ்சி நிலத்தின் கொடிச்சி, மலைச்சாரலில் கானவன் அம்பெய்து கொன்ற முள்ளம் பன்றியின் கொழுத்த தசைப் பகுதியைக் கிழங்கோடு சிறுகுடியினர் பலருக்கும் பகுத்துக் கொடுத்தை அறியமுடிகிறது.

“வேறு கிளைந்திட்ட கலுழ்கண் ஊறல்

முறையின் உண்ணும் நிறையா வாழ்க்கை

முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் ஆடவர்

உடும்புஇழுது அறுத்த ஒழுங்காழ்ப் படலைக்

கொள்ளி வைந்த கொடுநிண நாற்றம்

மறுகுடன் கமழும்” (புறம். 325)

நீரற்ற அக்குழியின் சேற்றைத் தோண்டிப் பெற்ற கலங்கிய ஊற்றுநீரினைத் தங்களுக்குள் முறையாகப் பெற்று உண்கின்ற நிறைவுபெறாத வாழ்க்கையினை உடையோர்களாக அச்சீறூரினர் உள்ளனர். முள்ளம்பன்றி மற்றும் உடும்பின் இறைச்சியைத் தங்கள் சிற்றில்லின் முள் பகுத்துக் கொடுத்தனர் என்ற கருத்தை மேற்பாடல் குறிப்பிடுகிறது. இங்குப் பகுத்துண்ணும் பண்பைக் காணமுடிகிறது.

இவையாவும் புன்செய் வேளாண்மை வழியும் வேட்டைவழியும் பெறப்பட்டவை. இவையே இனக்குழுச் சமுதாய உணவாக விளங்கியுள்ளன.

இனக்குழு கூட்டுழைப்பும் பகிர்ந்து உண்ணலும்

“வரலாற்றுக்கு முற்பட்ட உணவு சேகரிப்போர், வேட்டையாடுவோர், புராதன விவசாயம் செய்வோர், கால்நடை வளர்ப்போர் ஆகியோர் வாழந்த இனக்குழுச் சமுதாயத்தில் குழு ஒற்றுமையும் குழு சமத்துவமும் அவர்களுடைய வலிமையாகும்இ இயற்கையோடு போராடுவதற்குத் தேவையான கருவித் தொகுதிகளை அவர்கள் பெற்றிருக்கவில்லை. தம்மிடமிருந்து தொழில் நுணுக்க அறிவைப் பயன்படுத்தி, இயற்கையை எதிர்த்துப் போராடி அவர்கள் தங்கள் உணவைப் பெற்றனவர்” (கா.சுப்பிரமணயிம், சங்க காலச் சமுதாயம், ப. 38)

இனக்குழு மக்கள் கூட்டு வாழ்க்கை நடத்தினர். கிடைத்ததைப் பகுத்துண்டனர். வேட்டை வாழ்க்கை, புராதன விவசாயம் ஆகிய பொருளாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூட்டு வாழ்க்கை அமைந்தது.

கானவன் எய்த முள்ளம் பன்றியின் தசையைக் கொடிச்சி சிறுகுடியினருக்கு மகிழ்ச்சியுடன் பகுத்துக் கொடுத்தாள் (நற். 85). ஆடவர் உடும்பைச் சீறூர் முன்றிலிலு் கூறு செய்தனர் (புறம். 325). புன்புலச் சிறுகுடியில் கள்ளுண்ட மறவர் விசைத்து வில்லராய் வேட்டம் பாகி முலலைப் படப்பையில் புல்வாயைப் பகுத்தனர் (அகம். 284).

கொடுவில் ஆடவர் அதர் கூட்டுண்பவராகவும் (அகம். 167), கொடுஞ்சிலை மறவர் கடறு கூட்டுண்பவராகவும் (புறம். 330), வாட்குடியினர், மறம்பூணி வலி கூட்டுண்பவராகவும் (புறம். 332) சித்திரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கிடைத்தவற்றைப் பகுத்துக் கொண்டனர். பகுத்துண்டு வாழ்பவராகவே இனக்குழ மக்கள் இருந்தனர்”. (கா.சுப்பிரமணயிம், சங்க காலச் சமுதாயம், பக். 32-33)

என்ற கா.சுப்பிரமணியம் அவர்களின் ஆய்வு கூடி உண்ணலைத் தெளிவுபடுத்தக் காணலாம்.

“குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்

பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்

மோட்டு மணல் அடைகரை கோட்டுமீன் கெண்டி

மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்

வளங்கெழு தொண்டி” (அகம். 10)

“கொடுந்திமில் பரதவர் வேட்டம் வாய்த்தென

இரும்புலாக் கமழும் சிறுகுடி பாக்கத்துக்

குறுங்கண் அவ்வலைப் பயம் பாராட்டி

கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன்” (அகம். 70)

எனும் பாடல்கள் கடற்கரையோர நெய்தல் நிலப் பகுதியில் வாழும் மீனவர்கள் தாங்கள் கடலில் வேட்டையாடிப் பிடித்து வந்த மீன்களைப் பலருக்குப் பகுத்துத் தந்ததைக் குறிப்பிடுகின்றன.

விளைந்த உணவுப் பயிர்களையும் வேட்டையாடிப் பெற்ற விலங்குகளின் இறைச்சியையும் பகிர்ந்துண்டதையும் கூடியுண்டதையும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் குடிக்கும் தண்ணீரும் முறையாகப் பகிர்ந்தளிக்கப் பெற்றதையும் இதன் மூலம் அறியமுடிகிறது.

“இனக்குழு சமுதாயப் பண்புகளில் தலையாயது பொதுவில் வைத்து உண்ணுதல் என்பது. சங்கப் பாடல் இதைக் கூட்டுண்ணுதல் எனக் குறிப்பிடுகின்றது” (பெ. மாதையன், சங்க கால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், ப. 42)

என்று மாதையன் அவர்கள் குறிப்பிடுவதோடு சில சான்றுகளால் அக்கருத்தை நிறுவியுள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

**பண்டமாற்றின் தொடக்கம்**

உணவுச் சேகரிப்புச் சமூகமாகவும் வேட்டைச் சமூகமாகவும் விளங்கிய நிலையில் அடுத்து இனக்குழுவில் சிலர் காடுகளை நோக்கிச் சென்றனர். அங்கு இயற்கையில் கிடைத்த உணவுப் பொருட்கள், வேட்டையாடிப் பெற்ற இறைச்சியோடு புன்செய் வேளாண்மையைத் தொடங்கினர். அதற்குக் கால்நடைகளைப் பழக்கப்படுத்தினர். அவற்றுக்கான வளர்ச்சிக்காகவும் புன்செய் வேளாண்மை நிகழ்ந்தது. கால்நடை பசுக்களின் பயன்பாடு பெரிதும் அமைந்தது. ஆநிரைகளிடமிருந்து பெறப்படும் பால்படு பொருள்களான பால், தயிர், மோர், நெய் ஆகியன மிகுதியும் கிடைத்தன. அவை அவர்களின் தேவைக்கும் மிகுதியாக இருந்திருக்க வேண்டும். மிகுதியாகக் கிடைத்த பால், தயிர், மோர், நெய் போன்றவற்றைப் பிற நிலங்களில் வாழ்ந்த குறிஞ்சி, பாலை நில மக்களுக்குக் கொடுத்து அதற்கு மாற்றாகத் தேன், கிழங்கு, இறைச்சி, பயிறு, நெல் போன்றவற்றைப் பெற்றனா. இவ்வகையிலேயே மருதநில நன்செய் வேளாண்மையில் மிகுதியாகக் கிடைத்த நெல்லும் நெய்தலில் மிகுதியாகக் கிடைத்த உப்பும், மீனும் பண்டமாற்றாக அமைந்தன. அவ்வகையில் ஆநிரைப் போர் சமூக வாழ்வில் பண்டமாற்று தொடங்கியிருக்க வேண்டும்.

பண்டைத் தமிழ்ச் சமூக அமைப்பில் இனக்குழு வாழ்க்கை காணுதுல் இன்றியமையாத ஒன்று. பரிணாமவியற் கோட்பாட்டின் வழி அச்சமூக அமைப்பு இடம் பெறுதல் வேண்டும். இனக்குழு வாழ்க்கையில் உணவு சேகரிப்புச் சமூகம் இயற்கையில் கிடைத்த உணவுப் பொருள்களைச் சேகரித்து உண்ட சமூகம். பெரும்பான்மையும் மலை, மலை சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்த இவர்கள் தேன், கிழங்கு போன்றவற்றை உணவாகச் சேகரித்து உண்டனர்.

அவ்வாறே அடுத்த நிலையில் வேட்டைச் சமூக வாழ்க்கையில் சேகரித்த உணவுப் பொருள்கள் தேவையை நிறைவு செய்யாத வகையில் விலங்குகளை உணவுக்காக வேட்டையாட வேண்டியதாயிற்று. உணவுத் துவையை நிறைவு செய்வதற்காக மான், பன்றி, முள்ளம் பன்றி போன்ற விலங்குகள் வேட்டையாடப் பெற்றன.

உணவுச் சேகரிப்புச் சமூகத்திலும் வேட்டைச் சமூகத்திலும் இயற்கையாலும் வேட்டையாலும் கிடைத்த உணவுப் பொருள்களைச் சரிசமமாகப் பகுத்து உண்டுள்ளனர். அவ்வாறே அவர்கள் கூட்டுழைத்தலையே மேற்கொண்டிருந்துள்ளனர். கூடியுழைத்தல், கூட்டுண்ணல் என்பனவே அவர்களின் தனித்த அடையாளங்கள்.

அடுத்த வளர்நிலையில் காடுகளை நோக்கி இடம்பெயர்ந்த கால்நடை வளர்ப்புச் சமூகம் உருவாயிற்று. புன்செய் வேளாண்மைக்காகக் கால்நடைகளைப் பழக்கிய அவர்கள், ஆநிரைகளின் பால்படு பயன்களை அறிந்தனர். மிகுதியாகப் பெற்ற அவற்றைத் தங்கள் தேவைக்குப் போக எஞ்சியவற்றைப் பிறரிடம் கொடுத்துப் பிற சமூகத்தாரிடமிருந்து தேன், கிழங்கு, இறைச்சி போன்றவற்றை மாற்றாகப் பெற்றனர். இப்பண்டமாற்று முறை மருதநிலத்திலும் நெய்தலிலும் தொடர்ந்து வளர்நிலை பெற்றது.

**முடிவுரை**

பண்டைத் தமிழ்ச் சமூக அமைப்பில் இனக்குழு வாழ்க்கை காணுதல் இன்றியமையாத ஒன்று. பரிணாமவியற் கோட்பாட்டின் வழி அச்சமூக அமைப்பு ஆயப்பெறுதல் வேண்டும்.

இனக்குழு வாழ்க்கையில் உணவு சேகரிப்புச் சமூகம் இயற்கையில் கிடைத்த உணவுப் பொருள்களைச் சேகரித்து உண்ட சமூகம் பெரும்பான்மையும் மலை மலைசார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்த இவர்கள் தேன், கிழங்கு போன்றவற்றை உணவாகச் சேகரித்து உண்டனர். அடுத்த நிலையில் வேட்டைச் சமூக வாழ்க்கையில் விலங்குகளை உணவுக்கும் வேட்டையாட வேண்டியதாயிற்று.

உணவுச் சேகரிப்பு சமூகத்திலும் வேட்டைச் சமூகத்திலும் இயற்கையாலும் வேட்டையாலும் கிடைத்த உணவுப் பொருள்களைச் சமமாகப் பகுத்து உண்டுள்ளனர். அவ்வாறே அவர்கள் மூட்டுழைத்தலையே மேற்கொண்டிருந்துள்ளனர், கூடியுழைத்தல் கூட்டிண்ணல் என்பனவே அவர்களின் தனித்த அடையாளங்கள்.

## துணை நூல்கள்


கா.சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.

பெ.மாதையன், சங்க கால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2004.

கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர், 2008.

பஞ்சாங்கம், க. தொன்மத் திறனாய்வு, தஞ்சாவூர், அன்னம் பதிப்பகம், 2011.

சிவத்தம்பி, கார்த்திகேசு, பண்டைத் தமிழ்ச் சமூகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1998.

பெ.மாதையன், சங்க கால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2004.


*****